வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 13.07.2024 சனிக்கிழமை | இதழ் : 195 | பக்கங்கள் : 12

### ஜனாதிபதித் தேர்தலில்

# தமிழ் பொது வேட்பாளர் களமிறங்குவது அவசியம்

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி இந்திய தூதுவருக்கு எடுத்துரைப்பு

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தயாராகவுள்ள எந்தவொரு சிங்கள சமூகத்தை சேர்ந்த வேட்பாளரும் தமிழ் மக்களின் பிரச்னைக்கு திட்டவட்டமான - உறுதியான தீர்வை முன்வைக்கவில்லை. எனவே, வரும் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்குவது அவசியம்.

- இவ்வாறு இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் தெரிவித்துள்ளனர் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினர். 11





## யாழின் கிராம, நகரங்களில் விசேட அபிவிருத்தி திட்டம்!

### பிரதமர் தினேஷ் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக உள்ளூராட்சி நிர்வாகத்தில் கிராமிய மற்றும் நகர அபிவிருத்திக்கான விசேட ஏற்பாடுகளை அதிகரிக்கத் தொடங்கியுள்ளோம் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன நேற்றைய தினம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு வருகை தந்தார். இதன்போது பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கேற்றார். 11

### ஜனாதிபதித் தேர்தல்:

## இடைநிறுத்த உத்தரவிட கோரி உயர்நீதிமன்றில் மீண்டும் மனு

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரி மீண்டும் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றில் முறையாக நிறைவேற்றப்படாததால் அதனை முறையாக நிறைவேற்ற பொது வாக்கெடுப்பு நடத்த ஆணையிடுமாறும் அந்த மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அருண லக்சிறி என்பவர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் தேர்தல்கள் ஆணைக்குழு - அதன் உறுப்பினர்கள், பாராளுமன்ற பொதுச் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக ஒரு வருடத்துக்கு பின்னர் 11



## யுனெஸ்கோ தலைவர் வருகிறார்

கொழும்பு, ஜூலை 13

ஐக்கிய நாடுகள் கல்வியியல், விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பின் (யுனெஸ்கோ) தலைவர் ஒட்ரே 11

## துன்னாலையில் சுற்றிவளைப்பு; 17 சந்தேகநபர்கள் நேற்று கைது!

வடமராட்சி, ஜூலை 13

துன்னாலையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

நெல்லியடி பொலிஸ் பிரிவில் பொலிஸாரும் இராணுவத்தினரும் மோப்பநாய்களின் உதவியுடன் இந்த சுற்றிவளைப்பை முன்னெடுத்தனர்.

இதன்போதே 17 பேர் கைது செய்யப்பட்டனர். கைதான அனைவரும் திறந்த பிடியாணைகள், பிடியாணைகள், கசிப்பு விற்பனை போன்ற குற்றங்களுடன் தொடர்புடையவர்களாவர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-02)

### உரிய நேரத்தில் ஜனாதிபதி தேர்தல்

## தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு 30 எம். பிக்கள் கூட்டாக கடிதம்!

கொழும்பு, ஜூலை 13

அரசமைப்பு சதிகளின் ஊடாக ஜனாதிபதித் தேர்தலுக்கு விடுக்கப்படும் அழுத்தங்களை தடுக்கக் கோரியும் - உரிய நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கூட்டாக எழுத்துமூலம் கோரியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி, சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் என 30 பேரின் 11



## புளியங்கூடல் ஆலயத்தில் 60 பவுண் நகைகள் மாயம்

### விசாரணை கோரி மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

புளியங்கூடல் முத்து விநாயகர் ஆலயத்தில் இருந்த 60 பவுணுக்கும் அதிகமான நகைகள் மற்றும் பணம் காணாமல் போனமை தொடர்பில் உரிய விசாரணையை வலியுறுத்தி அந்தப் பிரதேச மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் புளியங்கூடல் சந்தியில் இருந்து ஆரம்பமான மக்களின் பேரணி பிரதான வீதி வழியாக முத்து விநாயகர் ஆல யத்தை சென்றடைந்தது. பின்னர், ஆலய முகப்பில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 11

## 87 கிலோ கேரள கஞ்சாவுடன் கொடிகாமத்தில் இருவர் கைது!

தென்மராட்சி, ஜூலை 13

கொடிகாமத்தில் வீடொன்றில் 87 கிலோ கேரள கஞ்சாவை சாவகச்சேரி பொலிஸார் நேற்று கைப்பற்றினர். அத்துடன், இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, சங்குப்பிட்டி பாலத்தில் பொலிஸார் நடத்திய சோதனையின்போது காருக்குள் சூட்சுமமாக மறைத்து கடத்தப்பட்ட 500 கிராம் கஞ்சாவுடன் நேற்று முன் தினம் ஒருவர் கைது செய்யப்பட்டார். 11

## கொக்குத்தொடுவாய் புதைகுழி; 47 மனித எலும்புக்கூடுகள் மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 13

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற்று மேலும் 3 மனித எலும்புக்கூடு எச்சங்களும் துப்பாக்கி தோட்டாக்களும் அடையாளம் காணப்பட்டன. இதன் மூலம், அங்கு மீட்கப்பட்ட மனித எச்சங்களின் எண்ணிக்கை 47ஆக உயர்ந்துள்ளது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் மூன்றாவது கட்ட ஆய்வில் 7ஆவது நாளாகவும் நேற்று வெள்ளிக்கிழமையும் அகழ்வு தொடர்ந்தது. 11

## ஜே. வி. பி. தலைவருக்கு பாதுகாப்பு அதிகரிக்கும்

கொழும்பு, ஜூலை 13

ஜே. வி. பி. மற்றும் அது தலைமையிலான கூட்டணியான தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அநுரகுமார திஸநாயக்கவுக்கு பல ஆபத்துகள் உள்ளன. இதனால், அவரின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் கட்சியின் வேட்பாளராக போட்டியிவுள்ளார். இதற்கான பிரசாரத்தை தேசிய மக்கள் சக்தி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

நமது மூத்த ஊடகவியலாளர் வீரகத்தி தனபாலசிங்கம் தனது 'எக்ஸ்' தளத்தில் எழுப்பியுள்ள கேள்வி பலரின் கவனத்தைப் பெற்றிருப்பதை உணர முடிகின்றது.

அவர் எழுப்பியுள்ள கேள்வி இதுதான்:

"மறைந்த மூத்த தமிழ் அரசியல்வாதி சம்பந்தன் ஒரு தோல்வியடைந்த அரசியல்வாதி என்று பலர் எழுதுகிறார்கள். இதுவரை வெற்றி பெற்ற தமிழ் அரசியல்வாதி யார்?".

இதுவே, அவர் எழுப்பியுள்ள கேள்வி. இந்தக் கேள்வியில் ஒரு விடயம் மறைமுகமாக தொக்கி நிற்கிறது. அதாவது அவருக்கும்கூட, சம்பந்தன் தோல்வியடைந்த அரசியல்வாதிதான் என்பதை நிராகரிக்க முடியவில்லை.

சம்பந்தன் பற்றிய அந்தக் குறிப்பை படித்ததும்தான் சில விடயங்கள் ஞாபகத்துக்கு வந்தன. சம்பந்தனின் இறுதிக்கிரியைகள் திருமலையில் நடைபெற்றபோது நடந்த பல விடயங்களை அறிந்திருந்தபோதிலும், அவற்றை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவருக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அஞ்சலி பற்றி எழுதியபோது ஆய்வாளர் நிலாந்தன், "தோற்றுப்போன தலைவர்" என்றுதான் எழுதியிருந்தார். இவ்வாறு எழுத அவரைத் தூண்டியதே, அவரின் இழப்பு தமிழ் மக்களைப் பாதிக்க வில்லை என்பதுதான். ஒரு தலைவரின் இழப்பு - அந்தத் தலைவரை தமது அரசியல் தலைவராக இதுவரை வைத்திருந்த மக்களையே பாதிக்கவில்லை என்றால் அந்தத் தலைவர் தோற்றுவிட்டார் என்பதுதான். இந்தத் தோல்வியிலிருந்தே அவரின் அரசியல் வாழ்க்கை எடை போடவேண்டியிருக்கின்றது.

சம்பந்தனின் இறுதிக்கிரியைகள் திருகோணமலையிலுள்ள அவரின் சொந்த வீட்டில் நடைபெற்றன. கிரியைகள், அஞ்சலி நிகழ்வுகள் அனைத்தையும் அவரின் குடும்பத்தினரே முன்னின்று நடத்தினார்கள். அஞ்சலி உரைகள் ஆற்றுவதற்காக மேடை ஒன்று போடப்பட்டிருந்தது. நிகழ்ச்சிகளை கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் சம்பந்தனின் நெருங்கிய அரசியல் சகாவுமான தண்டாயுதபாணியே தலைமை தாங்கி நடத்தினார். அந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கும் பொறுப்பை தன்னிடமே தருமாறு சம்பந்தனால் அரசியலுக்கு அழைத்துவரப்பட்ட சுமந்திரன் விரும்பியபோதிலும் திருகோணமலையில் சம்பந்தனோடு அரசியலில் பயணித்தவர்கள் அதற்கு விரும்பவில்லை என்றும் தண்டாயுதபாணியே அதற்கு தலைமை தாங்க வேண்டும் என்றும் பிடிவாதமாக மறுத்துவிட்டனர் என்றும் அறிய முடிந்தது. பின்னர் கொழும்பிலிருந்து வருகின்ற தலைவர்களை யாவது பேசுவதற்கு அழைப்பதற்கு தனக்கு சந்தர்ப்பம் தரவேண்டும் என்று சுமந்திரன் விடுத்த கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டனராம்.

அன்றைய நிகழ்வுகளில் சம்பந்தன் குடும்பத்தினர் விடுத்த ஒரே 'உத்தரவு', ஒருவர் மேடைக்கு வரக்கூடாது என்பதுதான். அந்த ஒருவரும் - சம்பந்தனால் வலிந்து அரசியலுக்கு கொண்டுவரப்பட்டு அவர் மறைவின் பின்னர் பாராளு மன்றம் செல்ல சந்தர்ப்பம் பெற்ற வர்தான்.

இனி இன்றைய விடயத்துக்கு வருவோம்:

வீரகத்தி தனபாலசிங்கத்தின் கேள்விக்கு வருவோம். இதுவரை வெற்றிபெற்ற தலைவர் யார்? இதுவே, அவரின் கேள்வி.

வெற்றி என்று அவர் எதனைக் கருதுகிறார் என்பது தெரியவில்லை. தந்தை செல்வா தனது அரசியல் வாழ்க்கைக் காலத்தில் பல ஒப்பந்தங்களை சிங்களத் தலைவர்களுடன் செய்தார். அவை அவர் கோரிநின்ற சமஷ்டி கட்டமைப்பை அமைப்பதற்கான ஒப்பந்தங்கள் அல்ல. அந்த நேரத்தில் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து அதி உச்சமாக பெறக்கூடியது என்று அவர் நம்பியதை பெற ஒப்பந்தங்களை செய்தார். ஆனால், அவற்றை செய்த சிங்கள தலைவர்களே பின்னர் அவற்றை கிழித்து எறிந்தனர். அதாவது, செல்வா ஏமாற்றப்பட்டபோதும் தொடர்ந்து தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒரு போராட்ட மாகவே வைத்திருந்தார். அதாவது, தமிழர்கள் தமது உரிமைகளுக்காக போராடுகின்றார்கள் என்பதை 'போராட்டமாகவே' அடுத்த சந்ததியிடம் விட்டுச்சென்றார்.

பின்னர் அந்தப் பாத்திரத்தை ஏற்றுக்கொண்ட அமிர்தலிங்கமும் அதி உச்ச கோரிக்கை என்னவாக இருந்தாலும் அவ்வப்போது கிடைக்கக்கூடியதை பெற்று தொடர்ந்து போராட வேண்டும் என்று நினைத்தார். அதனால்தான் மாவட்ட சபைகளையும் ஏற்றுக்கொண்டார். பின்னாளில் இந்திய உதவியுடன் மாகாண சபைகள் அமைக்கப்பட்ட போது, அதனையும் வடக்கு - கிழக்கு இணைந்த சபைகளாக பெறுவதில் கடைசிவரை போராடினார்.

ஆனால் சம்பந்தன், கடைசிவரை தான் நினைப்பதே நடக்கவேண்டும் அல்லது கிடைத்தால் அதிஉச்ச தீர்வாக சமஷ்டியே கிடைக்க வேண்டும், அது இல்லையென்றால் இடையில் எதனையும் தொட்டுக் கூடப் பார்க்கமாட்டேன் என்று அடம்பிடித்தார்.

அதிகம் ஏன், அவர் முதன்முதலில் அரசியலுக்கு வந்தது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனி நாட்டு கோரிக்கைக்கான ஆணையைப் பெறுவதற்காக. ஆனால் அவரே, நாடு பிளவுபட்டுவிடக் கூடாது என்பதில் அக்கறையோடு இருந்தார் என்றும் அதனை அவர் தன்னிடமே கூறியிருக்கிறார் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரின் அஞ்சலி உரையின்போது கூறியிருந்தமை கவனிக்கத்தக்கது.

ஆக, தேர்தல் வெற்றிக்காக தமிழீழ கோரிக்கையை முன்வைத்தோமே தவிர, உண்மையில் நாங்கள் அதனை கோரவில்லை என்று சம்பந்தனே தெரிவித்திருக்கிறார்.

தலைவர் பிரபாகரன், தனது போராட்டத்தில் தோற்றாலும் தனது கோரிக்கைக்காகவே கடைசி வரை போராடினார். ஆனால் சம்பந்தன்?

அதிகம் ஏன், தான் எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது இந்தியப் பிரதமரின் அழைப்பை ஏற்று இந்தியாவுக்கு சென்றால், அது சிங்கள மக்களை ஆத்திரப்படுத்தும் என்று நினைத்து அங்கு செல்வதையே தவிர்த்துக்கொண்டார்.

தனபாலசிங்கம் கேட்பதுபோல வெற்றி பெற்ற தலைவர்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால், பல தலைவர்கள் வெற்றி பெறவில்லை என்றாலும் சம்பந்தன்போல தோற்றுப்போகவில்லை.!

ஊர்க்குருவி

# அவசர சட்டமூலம் கொண்டு வந்து குழப்பம் ஏற்படுத்த அரசு முயற்சி!

### லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி பதவிக்காலம் 5 வருடங்கள் என அரசமைப்பில் திருத்தம் மேற்கொண்டு அரசாங்கம் அவசர சட்டமூலமாக உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்க முயற்சிக்கிறது. இதன் மூலம் நாட்டுக்குள் ஏற்படும் குழப்பத்தை அடிப்படையாகக்கொண்டு ஜனாதிபதி, நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவார் என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது என எதிர்க்கட்சியின் பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணையை வழிமொழிந்து உரையாற்று கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி பதவிக்காலம் 5 வருடங்கள் என உயர் நீதிமன்றம் மூன்று தடவைகள் உறுதிப்படுத்தி இருக்கிறது. அதனால் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் எந்த பிரச்னையும் இல்லை. அமெரிக்காவின் அரசியலமைப்பு 250 வருடங்கள் பழைமை வாய்ந்தது. ஆனால் இந்த அரசியலமைப்பை 350 தடவைகள் அமெரிக்காவின் உயர் நீதிமன்றம் வியாக்கியானம் செய்துள்ளது.

அந்த வியாக்கியானம் எதுவும் அரசியலமைப்பில் உள்வாங்கியதில்லை. ஏனெனில், அமெரிக்க உயர் நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானம் அந்த நாட்டின் அரசியலமைப்பின் ஒரு பகுதியாகவே கருதப்படுகிறது.

பெரிய பிரித்தானியாவில் அரசியலமைப்பு இல்லை. சம்பிரதாயமும் வழக்கு தீர்ப்புகளுமே அந்த நாட்டின் அரசியலமைப்பு. எமது நாட்டிலும் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் அது அரசியலமைப்பின் ஒரு பகுதியாகும்.

அதனால் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என இதற்கு மீண்டும் சட்டமூலம் ஒன்று கொண்டுவர தேவையில்லை. அப்படியாயின் ஏன் 5 வருடங்கள் என தெரிவித்து அரசாங்கம் சட்டமூலம் கொண்டுவர வேண்டும்?. என்னை பொறுத்தவரை, அரசாங்கத்துக்கு இந்த சட்டமூலத்தை அரசியலமைப்பின் 122 கீழ் அவசர சட்டமூலமாக கொண்டுவர முடியாது என்றாலும் அதற்கு முயற்சிக்கிறது.

எனவே ஜனாதிபதி பதவிக்காலம் 5 வருடங்கள் என அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொண்டு அரசாங்கம் அவசர சட்டமூலமாக உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்கவே முயற்சிக்கிறது. இது சாத்தியப்படப்போவதில்லை. என்றாலும் ஜனாதிபதி அதற்காக முயற்சிக்கிறார்.

அவ்வாறு இல்லாவிட்டால் அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தை எதற்காக தற்போது அவசரமாக மேற்கொள்ள வேண்டும். ஜனாதிபதி எப்படியாவது இவ்வாறான ஒரு சட்டமூலத்தை அவசர சட்டமூலமாக உயர் நீதிமன்றத்துக்கு அனுப்புவார்.

உயர் நீதிமன்றம் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என தெரிவிக்கும். இதுதான் இவர்களின் ஒரே நோக்கம். இதன் மூலம் நாட்டுக்குள் பாரிய குழப்பம் ஏற்படும் சாத்தியம் இருக்கிறது. அதனால் உயர் நீதிமன்றம் அவ்வாறு செயல்படும் என நான் நினைக்கமாட்டேன் - என்றார்.

# திகன கலவர அறிக்கையை இன்னும் வெளியிடாதது ஏன்?

### முஜிபுர் ரஹ்மான் எம். பி. கேள்வி

கொழும்பு, ஜூலை 13

முஸ்லிம் மக்களுக்கு எதிரான திகன கலவரம் நடைபெற்று 6 வருடங்கள் கடந்துள்ள போதும் அது தொடர்பான விசாரணை அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை. எனவே இது தொடர்பாக தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

முஸ்லிம் மக்களுக்கு எதிராக 2018இல் திகன கலவரம் நடைபெற்று 6 வருடங்கள் கடந்துள்ளன. இந்த சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை மேற்கொண்டது. ஆனால், கலவரம் இடம்பெற்று 6 வருடங்கள் கடந்துள்ள போதும் அது தொடர்பான விசாரணை அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை.

எனவே, அரசமைப்பு பேரவையின் தலைவர் என்ற வகையில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இந்த விசாரணை அறிக்கை தொடர்பாக தேடிப்பார்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சபாநாயகரிடம் கோரினார் முஜிபுர் எம். பி.

# கிளிநொச்சியில் நடமாடும் சேவை

### இன்றும் நடைபெறும்

கொழும்பு, ஜூலை 13

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் "வெல்வோம் சிறீலங்கா நடமாடும் சேவை" நேற்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. இன்று சனிக்கிழமையும் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

நேற்று நடந்த ஆரம்ப நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பங்கேற்றிருந்தார்.

அத்துடன், அமைச்சின் மேலதிக செயலாளர், கிளிநொச்சி மாவட்ட பதில் எஸ். முரளிதரன் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

(ஐ)

# காணிக்குள் வெடிபொருள்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 13

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மந்துவில் வடக்கு குடியிருப்புப் பகுதியில் காணி ஒன்றில் இருந்து ஒரு தொகுதி வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர் தனது காணியை துப்பரவு செய்தபோது நிலத்தின் கீழ் புதைக்கப்பட்ட றம் ஒன்றினுள் வெடி பொருட்களை ஒத்த பொருட்கள் தென்பட்டமையால் அவர் உடனடியாக பொலிஸாருக்கு விடயத்தைத் தெரிவித்தார்.

இந்நிலையில் கொடிகாமம் பொலிஸாரோடு இணைந்து விசேட அதிரடிப்படையினரும் அவ் இடத்திற்கு விரைந்து பார்த்த போது வெடி பொருட்கள் காணப்பட்டன.

இவற்றில் 8 மகசின்கள், 2 கைக்குண்டுகள், 3 மிதி வெடிகள் மற்றும் சுமார் 1000 ரவைகளும் மீட்கப்பட்டன. குறித்த வெடி பொருட்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 13.07.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், ஆனி 29

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவாரா?

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான முயற்சிகளை தமிழ் சிவில் சமூக அமைப்புகள் முன்னெடுத்து வருகின்றன. எனினும், விடயம் எதிர்பார்த்த வேகத்தில் நகரவில்லை. செயல்பாடுகளில் வேகம் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. அதேவேளை தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆரம்பத்தில் எதிர்த்தவர்கள் - குறிப்பாக, சுமந்திரன் அணியினரும் தங்களின் எதிர்ப்பிலும் வேகத்தை காண்பிக்கவில்லை. ஏனெனில், அவர்கள் எதிர்பார்த்தவாறு சிவில் சமூகமும் செயல்பாட்டில் வேகம் காண்பிக்கவில்லை.

சிவில் சமூக அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் இணைந்து உறுதியாக செயல்படாத நிலையில் இந்த விடயம் வெற்றிப் பாதையில் பயணிக்குமா என்னும் கேள்வி உண்டு. இதற்கு இதுவரையில் தமிழ் மக்கள் பொதுச் சபையாக ஒன்றுபட்டிருப்பவர்கள் பதிலளிக்கவில்லை. சில காரணங்களால் - ஒருவேளை சில கட்சிகள் பின்வாங்கினால் தமிழ் மக்கள் பொதுச் சபையானது தனித்து தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை முன்கொண்டு செல்லுமா? அதற்கான வலுவுடன் அது இருக்கின்றதா? இந்தக் கேள்வியை மௌனமாக இருப்பதன் மூலம் கடந்து செல்ல முடியாது.

இலங்கைத் தீவு ஒரு சிக்கலான ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டிருக்கின்றது. இதுவரையில் யார் வெற்றிபெறுவார் என்பதை ஊகிப்பது மிகவும் கடினமாக இருக்கின்றது. இதே வேளை தேர்தல் நடைபெறுமா என்னும் கேள்வியும் ஒரு மூலையில் உறுத்திக் கொண்டே இருக்கின்றது. இது ரணில் விக்கிரமசிங்க ஆடுவதற்கான இறுதிக் களம். எனவே, அவர் தன்னால் எந்தளவு தூரம் ஆட முடியுமோ அனைத்து வகையான ஆட்டங்களையும் ஆடி முடிக்காமல் ஓயமாட்டார்.

இதில், வெளித்தரப்புகளின் தலையீடுகளையும் அவர் பொருட்படுத்தப் போவதில்லை. அவர்களை தன் பக்கம் சாய்ப்பதற்கு அவர் முயற்சிப்பார் - அதேவேளை, அவர்கள் தன் பக்கம் சாயாவிட்டாலும்கூட அவர்களை கருத்தில் கொண்டு தனது ஆட்டத்தை அவர் ஆடாமல் இருக்கப் போவதில்லை. இந்த விடயத்தில் இந்தியாவோ, அமெரிக்காவோ ஒரு கட்டத்துக்கு மேல் நேரடி தலையீடுகளை செய்வதற்கான வாய்ப்பும் இல்லை. ஏனெனில், அளவுக்கதிகமாக தலையீடு செய்து ஒருவேளை எதிர்பார்த்த பலனை அடையாவிட்டால் பாதகமான விளைவுகள் ஏற்படலாம்.

ரணில் பற்றி வெளித்தரப்புகளுக்கு நன்கு தெரியும். எனவே, ரணிலை பொறுத்தவரையில் வெளித் தரப்புகளை கருத்தில் கொண்டு முடிவுகளை அவர் எடுக்கப் போவதில்லை . மாறாக, தனக்கான இறுதிச் சொட்டு வாய்ப்பையும் உச்சமாக பயன்படுத்தும் தந்திரங்களையே அவர் புரிவார்.

இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு வெளித்தரப்புகள் விரும்பக்கூடிய விடயமாக இருக்கப் போவதில்லை. அதனை அவர்கள் நேரடியாகக் கூறாவிட்டாலும்கூட இதுதான் உண்மை நிலைமை. எனவே. எவர் ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும்கூட நாங்கள் முன்வைத்த காலை பின் வைக்க மாட்டோம் என்னும் அறிவிப்பை தமிழ் மக்கள் பொதுச் சபையாக ஒன்றுபட்டிருப்பவர்கள் விரைவாக வெளிப்படுத்த வேண்டும்.

# அரசை எதிர்த்து உயர்நீதிமன்றை இலங்கை ஆசிரியர் சங்கம் நாடும்!

## ஸ்டாலின் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 13

கடந்த 8, 9ஆம் திகதிகளில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தை இலங்கை ஆசிரியர் சங்கம் நாடும் என்று அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கடந்த 8, 9ஆம் திகதிகளில் 200 தொழிற்சங்கங்கள் இணைந்து சுகயீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுத்தன. இந்தப் போராட்டத்தில் பங்கேற்காத அதிகாரிகளுக்கு விசேட கொடுப்பனவும் ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வும் அறிவிக்கப்பட்டதுடன், அவர்களுக்கு பாராட்டு பத்திரம் அளிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அரசாங்கத்தின் இந்த செயல் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஒடுக்குகிறது என்று கண்டித்துள்ளது இலங்கை ஆசிரியர் சங்கம். அத்துடன், ஆசிரியர், அதிபர் மற்றும் முழு உழைக்கும் வர்க்கத்தினரின் கோரிக்கைகளை புறந்தள்ளி குறிப்பிட்ட சிலருக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதற்கு எதிர்ப்பும் தெரிவித்தது.

ஜூலை 8, 9ஆம் திகதிகளில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத அரச ஊழியர்களுக்கு வெகுமதியாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வை எதிர்த்து இலங்கை ஆசிரியர் சங்கம் உயர்நீதிமன்றில் மனு தாக்கல் செய்யும் என்றும் ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். (ஐ)

# கொலன்னாவை துப்பாக்கி சூடு; பிரதான சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 13

கொழும்பு - கொலன்னாவையில் கடந்த 9ஆம் திகதி இரவு பிரபல வர்த்தகர் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்கள் இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மித்தெனிய பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கெலே மகிந்த என்று அழைக்கப்படும் ராமநாயக்ககே இந்திக்க குமார, சந்தகெலும் ஜெயவர்த்தன ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 2 துப்பாக்கிகள், 12 தோட்டாக்கள் ,2 வேட்டை துப்பாக்கிகள், 100 கிராம் ஹெரோயின் , 3 கைபேசிகள் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் தற்போது பிரான்ஸில் வசிக்கும் பாதாள உலகக் குழுவை சேர்ந்த "ரொட் டம்ப அமில" என்பவரின் உதவியாளர்களாவர்.

இந்தக் கொலைக்காக கைதான இருவருக்கும் 4 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டதாக பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ஐ)

# கடந்த 6 மாதங்களில் மாத்திரம் 1,154 பேர் வீதி விபத்துகளில் பலி!

கொழும்பு, ஜூலை 13

இந்த ஆண்டில் ஆயிரத்து 154 பேரும் கடந்த ஆண்டில் 2 ஆயிரத்து 321 பேரும் வீதி விபத்துகளில் உயிரிழந்தனர் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், போக்குவரத்துத் துறையில் செயல்திறனை உருவாக்க பல திட்டங்களைத் தொடங்கியுள்ளோம். கடவத்தை பேருந்து நிலையம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த பேருந்து நிலையங்களில் நவீன போக்குவரத்து முகாமைத்துவ முறைகளும், நவீன தொழில்நுட்பங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 2023 இல் 2 ஆயிரத்து 214 வீதி விபத்துகள் பதிவாகின. அந்த வீதி விபத்துகளில் 2 ஆயிரத்து 321 பேர் உயிரிழந்தனர்.

இந்த ஆண்டின் ஜூன் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ஆயிரத்து 103 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அந்த வீதி விபத்துகளால் ஆயிரத்து 154 பேர் உயிரிழந்தனர். எனவே, இந்நிலைமையைக் குறைக்க எமது அமைச்சு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டுக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 5 கோடி ரூபாயை இலங்கை பொலிஸாருக்கு வழங்க வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தீர்மானித்துள்ளது என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




**மேடம்**
உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். பணவரவு திருப்தி தரும். அதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள். தொட்டது துலங்கும்நாள்.

**இடபம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் எதிர் பார்த்த லாபம் வரும். சக ஊழியர கள் ஆதரிப்பார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உயரும் நாள்.

**கடகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். திடீர் திருப்பமான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**துலாம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டிவரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். பொறுமை தேவைப்படும்.

**விருட்சிகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்கள் நிறைவேறும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மதிப்புக் கூடும்.

**தனுசு**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். சக ஊழியர்களை உதாசினப் படுத்த வேண்டாம். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

**மீனம்**
கடினமான வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

# சாட்டை துரைமுருகன் கைது நீதிமன்ற காவல் நிராகரிப்பு

சென்னை, ஜூலை 13

நாம் தமிழர் கட்சியின் பிரமுகர் சாட்டை துரைமுருகனை நீதிமன்ற காவலில் வைக்க முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் பிரசாரத்தின் போது, நா. த. க. வேட்பாளர் அபிநயாவை ஆதரித்து, அந்தக் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் சாட்டை துரைமுருகன் பிரசாரம் மேற்கொண்டார்.



அப்போது, முன்னாள் முதல்வர் கருணாநிதி குறித்தும், பட்டியலின மக்கள் குறித்தும் சாட்டை துரைமுருகன் அவதூறான கருத்துகளைத் தெரிவித்ததாக, திருச்சி மாவட்ட பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் தி. மு. க. தகவல் தொழில்நுட்ப அணி முறைப்பாடு செய்திருந்தது. இதன் பேரில், துரைமுருகன் மீது திருச்சி மாவட்ட சைபர் க்ரைம் பொலிஸார் 5 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து அவரைக் கைது செய்தனர்.

பின்னர் அவரை நீதிபதி சுவாமிநாதன் முன்னிலையில் முற்படுத்தினர். "இது புனையப்பட்ட வழக்கு, பல ஆண்டுகளாக அ. தி. மு. கவினர் பாடும் பாடலை மேற்கோள்காட்டி அவர் பேசியுள்ளார்" என்று சாட்டை துரைமுருகன் தரப்பு சட்டத்தரணிகள் நீதிபதியிடம் தெரிவித்தனர். இதனையடுத்து, நீதிமன்றக் காவல் நிராகரிக்கப்படுவதாக நீதிபதி தெரிவித்தார். பின்னர், சாட்டை துரைமுருகன் தனது கட்சியினருடன், அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். (எ)

# 13 தமிழக மீனவர்கள் சிறைவைப்பு இலங்கை கடற்படைக்கு கண்டனம்

சென்னை, ஜூலை 13

தமிழக மீனவர்கள் மேலும் 13 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில், இந்தச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 13 மீனவர்கள் வங்கக்கடலில் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் தான் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களை கைது செய்த இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

ஜூலை மாதத்தில் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது இது இரண்டாவது முறையாகும் என்று அன்புமணி மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# பா. ஜ. கவில் தம்மை இணைத்த தமிழக ஆம் ஆத்மி நிர்வாகிகள்

சென்னை, ஜூலை 13

புதுடில்லி அரசின் மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் டில்லி முதல்வரும், ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து, அந்தக் கட்சியில் இருந்து விலகி பலர் புதுடில்லியில் பா. ஜ. கவில் இணைந்து வருகின்றனர்.



இதன் நீட்சியாக தமிழக ஆம் ஆத்மி கட்சியின் இதர பிற்படுத்தப்பட்டோர் அணியின் மாநிலத் தலைவர் டி. கே. தமிழ்நெஞ்சம் தலைமையில் 40 நிர்வாகிகள் அந்தக் கட்சியில் இருந்து விலகி தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை முன்னிலையில் பா. ஜ. கவில் இணைந்தனர்.

அவர்களுக்கு பா. ஜ. க. உறுப்பினர் அட்டையை வழங்கி அண்ணாமலை வரவேற்றார். (எ)

# "இம்" என்றால் சிறைவாசம் "உம்" என்றால் வனவாசம்

## தி. மு. கமீது இ. பி. எஸ். சாடல்

சென்னை, ஜூலை 13

தன் கையில் இருக்கும் அதிகாரம், நிரந்தரமானது என்ற இறுமாப்போடு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் செயல்பட்டு வருகிறார். "இம்" என்றால் சிறைவாசம் "உம்" என்றால் வனவாசம் என்ற ரீதியில் வழக்குகள் போட்டு கைது செய்யும் அராஜகம் நாள்தோறும் அரங்கேறி வருகிறது என்று சாட்டை துரைமுருகன் கைதுக்கு அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் தனது எக்ஸ் தளத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார். "கடந்த மூன்றாண்டு தி. மு. க. ஆட்சியில் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், கடத்தல்காரர்கள், பாலியல் வன்கொடுமையாளர்கள் போன்றோர் சுதந்திரமாக நடமாடி வரும் நிலையில், ஆட்சியாளர்களின் தவறுகளை சுட்டிக்காட்டும் சமூக செயல்பாட்டாளர்கள் மீதும், அரசியல் கட்சியை சார்ந்தவர்கள் மீதும் சர்வாதிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்கதையாகி வருகிறது" என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனில் கையை வைத்தவர் விரல் சுவைக்காமல் விடார்!

## ஜனாதிபதியின் நடவடிக்கை குறித்து ஹக்கீம்

கொழும்பு, ஜூலை 13

**ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் மூன்று தடவைகள் உறுதிப்படுத்திய பின்னரும் அமைச்சரவை அரசியலமைப்பு திருத்தம் மேற்கொள்ள தீர்மானித்துள்ளமை தொடர்பில் பாரிய பிரச்னை இருக்கிறது. தேனில் கை வைத்தவர் விரல்களை சுவைக்காமல் இருக்கமாட்டார் என்ற சிங்கள பழமொழிக்கு ஏற்பவே ஜனாதிபதியின் நடவடிக்கை என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம்இடம்பெற்ற உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி பதவிக் காலம் தொடர்பில் அரசியலமைப்பில் முரண்பாடு இருப்பதாக அமைச்சரவையில் எடுத்திருக்கும் நடவடிக்கையின் பின்னணியிலேயே அது தொடர்பான விவாதம் இடம்பெறுகிறது. உண்மையில் அரசியலமைப்பில் முரண்பாடான நிலை இருக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது. சிங்களத்தில் ஒரு பழமொழி இருக்கிறது, அதாவது தேனில் கை வைத்தவர் விரல்களை சுவைக்காமல் இருக்கமாட்டார் என்று. அதனால் ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒருவர், அதில் தொடர்ந்து இருப்பதற்கு தேவையான சூட்சுமங்களை தேடிக்கொண்டிப்பதே இந்த நாட்டில் இருக்கும் பிரச்னை.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் உண்மையில் யாருக்கு வேண்டுமானாலும் இலகுவாக புரிந்துகொள்ள முடியும். அரசியலமைப்பில் ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் அமைச்சரவைக்கு முரண்பாடு இருந்தாலும், உயர் நீதிமன்றம் அது தொடர்பில் 3 தடவைகள் உறுதிப்படுத்தி இருக்கிறது. அப்படியானால் அரசாங்கம் ஏன் இதுதொடர்பில் அவசரப்படவேண்டும். உயர் நீதிமன்றல் இது தொடர்பில் வழக்கு தொடுத்தது யாருடைய தேவைக்கு என்பது அனைவருக்கும் தெரியும்,ஆனால் அமைச்சரவையின் தீர்மானத்துக்கு பின்னர் அது வெளிப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் 3 தடவைகள் உறுதிப்படுத்தி பின்னரும் அமைச்சரவையில் இது தொடர்பில் ஏன் அவசரமாக தீர்மானம் மேற்கொள்ளவேண்டும் என கேட்கிறேன். அதனால் இதற்கு பின்னரல் மறைமுகமான வேலைத்திட்டம் இருக்கலாம் என்ற சந்தேகம் தற்போது எழுந்திருக்கிறது. பாராளுமன்றத்தில் இருக்கும் ஒரு சிலருக்கு தங்களின் கிராமங்களுக்கு செல்ல முடியாத நிலை இருக்கிறது. அதேபோன்று அடுத்த தேர்தலில் பாராளுமன்றத்துக்கு வரமுடியாது என்று நினைப்பவர்கள் இருக்கிறார்கள். அதனால் பாராளுமன்ற தேர்தலை இரண்டு வருடங்களுக்கு பிற்படுத்திக் கொள்ள முடியுமானால் இவர்களுக்கு அது மகிழ்ச்சியாகும்.

அதனால் ஜனாதிபதிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கும் இந்த தேவை இருக்கிறது. அதனை மேற்கொள்ளவே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன-என்றார். (அ)

# இறக்குவானையில் பிரித்தானியர் பாலத்தை அகற்றுவதற்கு முயற்சி

## தடுத்து நிறுத்திய பிரதேச மக்கள்

கொழும்பு, ஜூலை 13

இறக்குவானையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பாலம் ஒன்றை அகற்றும் நடவடிக்கைகள் பிரதேச மக்களின் எதிர்ப்பு காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இறக்குவானை - தெனியாய பிரதான பாதையில் அமைந்துள்ள எலட்டன் பாலம் என அழைக்கப்படும் இந்தப் பாலம் சுமார் 116 வருட வரலாற்றைக் கொண்டது.

இந்த பாலத்தை வீதி அபிவிருத்தி பணிகளுக்காக அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்த வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது.

இவ்வாறு அப்புறப்படுத்தப்படும் பாலமானது, தொல்பொருள் பெறுமதிமிக்கது என்ற அடிப்படையில் அதனை அநுராதபுரம் - மெல்சிறிபுர பகுதியில் மீள நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இறக்குவானையின் அடையாளமாகக் காணப்படும் இந்த பாலத்தை அப்புறப்படுத்த அங்கு எதிர்ப்புக்கள் வெளியாகின.

இதன்படி, இறக்குவானை மகா நாயக்க தேரர் உள்ளிட்ட பிரதேச மக்கள் பாலம் அமைந்துள்ள பகுதிக்கு சென்று தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதையடுத்து அந்த இடத்திற்கு வந்த பொலிஸார் விடயம் தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

பாலத்தை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்த முடியாது என வீதி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் கூறியதையடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

அதன்பின்னர், பொலிஸாரின் தலையீட்டில் பாலத்தை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

இதையடுத்து, பாலத்தை அப்புறப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட பொருட்கள் உள்ளிட்டவற்றை வாகனங்களில் ஏற்றி, அதிகாரிகள் அங்கிருந்து வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# இலங்கையில் 100 வயதை கடந்த 495 பேர் உள்ளனர்!

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் நூறு வயதைக் கடந்தவர்கள் 495 பேர் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

முதியோர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு உதவித்தொகையைப் பெற இந்த நபர்களுக்கும் உரிமை உண்டு என அவர் குறிப்பிட்டார்.

“60 வயதுக்கு மேற்பட்டோர் 27 இலட்சம் பேர் உள்ளனர். இந்நிலையில், ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் 10 இலட்சத்தை தாண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# 6 இந்தியர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 13

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆடியம்பலம பகுதியில் விசா இன்றி தங்கியிருந்த 6 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

25, 26, 33, 38, 39 மற்றும் 42 வயதுடைய இந்திய பிரஜைகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 1,000 சிகரெட்டுகள் அடங்கிய 50 சிகரெட் கார்ட்டுன்களுடன் இந்திய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கூட்டுறவுச் சங்கங்களின் வீழ்ச்சியை தடுக்க முறையான திட்டம் அவசியம்!

## சஜித் பிரேமதாஸ சபையில் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்கள் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுத் திட்டங்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கூட்டுறவுச் சங்கங்கள் என்பது இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிகரமான சமூக தொழில் முனைவு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட தொரு முன்னெடுப்பாகும்.



தற்போது, நாடு முழுவதும் சுமார் 14,000 கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன.

ஆனால் பல்வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளினால் அவற்றின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் கூட்டுறவுச் சங்கங்கள் வீழ்ச்சியடைவதைத் தடுக்கவும், அவற்றை மேம்படுத்தவும் விசேட வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் வீழ்ச்சியடைந்து வரும் இவ்வேளையில், சிறு தொழில்களை மீண்டும் வலுவூட்டுவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்-என்றார்.

# வேகக் கட்டுப்பாட்டு விதிமுறை அடங்கிய வர்த்தமானி அடுத்த இரு வாரங்களுக்குள்!

கொழும்பு, ஜூலை 13

தற்போது முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பு, உண்மையான தொழிற்சங்க உரிமைகளுக்காக அன்றி, அரசியல் தேவைகளுக்காகவே முன்னெடுக்கப்படுவதாகப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

போக்குவரத்துத் துறையில் செயற்திறனை உருவாக்குவதற்கு பல்வேறு திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.



மேலும், வேகக் கட்டுப்பாட்டு ... களைக் கொள்வனவு செய்வதற்கு 50 மில்லியன் ரூபாவை இலங்கை பொலிஸாருக்கு வழங்க வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தீர்மானித்துள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து போக்குவரத்து அமைச்சின் தலையீட்டுடன், வீதி வேகக் கட்டுப்பாட்டு தொடர்பில் தேவையான விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படவுள்ளதாகவும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மேலும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் பற்றிய உண்மையை கண்டறிந்து நீதியை நிலைநாட்டுவது அவசியம்!

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 13

**காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்படும் அதே வேளை, நிலைமாறுகால நீதியை முன்னிறுத்திய நியாய பூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியமென அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் காணாமல் போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.**

அமெரிக்கத்தூதரகத்தின் அழைப்பின்பேரில் தூதுவர் ஜூலி சங்குக்கும் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் சார்பில் அதன் தவிசாளர் சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த மற்றும் நிறைவேற்றுப்பணிப்பாளர் சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகள் மற்றும் சவால்கள் தொடர்பில் அமெரிக்கத் தூதுவருக்கு விளக்கமளித்த அலுவலக அதிகாரிகள், அதன் அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இரு தரப்புப் பங்காண்மை மற்றும் ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்வது குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

அதேபோன்று மனிதப் புதைகுழி அகழ்வு உள்ளடங்கலாக காணாமல்போனோர் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் மனித எச்சங்களை ஆய்வுக்கு உட்படுத்தவேண்டிய அவசியமிருப்பதனால், இவ்வனைத்து செயன்முறைகளுக்கும் அமெரிக்காவின் நிதி, தரவு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அதேவேளை காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்படவேண்டியது அவசியம் எனும் தனது நிலைப்பாட்டை காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகளிடம் எடுத்துரைத்த அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங், நிலைமாறுகால நீதியை முன்னிறுத்திய நியாய பூர்வமான நடவடிக்கைகளின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மேலும் இது குறித்து தனது உத்தியோகபூர்வ "எக்ஸ்" தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அமெரிக்கத் தூதுவர், "காணாமலாக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்விக்கான பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இலங்கையர்களுக்கு அதற்கான பதிலையும், ஆறுதலையும் வழங்குவதற்கு முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் அவசியமான ஒத்துழைப்பை வழங்க அமெரிக்கா தயாராக இருக்கிறது" எனத் தெரிவித்துள்ளார்.

(அ)

# 180,000 ரூபா மோசடி; இருவர் நேற்று கைது

கொழும்பு, ஜூலை 13

நபரொருவரின் தொலைபேசிக்கு அழைப்பு விடுத்து பல்பொருள் விற்பனை நிலையமொன்றிலிருந்து பணப் பரிசு கிடைத்துள்ளதாக கூறி வங்கி கணக்கினை பெற்று 180,000 ரூபா பணத்தை மோசடி செய்ததாக கூறப்படும் இருவர் கொம்பனி வீதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொல்கஹவளை மற்றும் கேகாலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 23 மற்றும் 30 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபரிகளிடமிருந்து 7 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 109 சிம் அட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பல்வேறு பிரதேசங்களில் நபர்களை ஏமாற்றி பண மோசடி செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொம்பனி வீதி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# பாதாள உலகக் கும்பலிடமிருந்து பொலிஸாருக்கு கொலை மிரட்டல்



கொழும்பு, ஜூலை 13

அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து பாதாள உலக குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்குப் பாதாள உலகக் கும்பலிடமிருந்து கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாதாள உலக குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகள் சிலரின் பெயர்கள் பட்டியல்படுத்தப்பட்டு அவர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், பாதாள உலகக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படாது.

விசேடமாக நாடளாவிய ரீதியில் உள்ள சட்டவிரோதத் துப்பாக்கிகள் அனைத்தும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டு விசாரணைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது-என்றார்.

(அ)

# விவசாய ஓய்வூதிய கொடுப்பனவு; அரசு 5386 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



கொழும்பு, ஜூலை 13

2024ஆம் ஆண்டுக்கான விவசாய ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்குவதற்காக அரசாங்கம் 5386 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இடை நடுவில் தடைப்பட்ட பயனாளிகளுக்கு விரைவில் ஓய்வூதியத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது தொடர்பில் விசேட செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என விவசாய பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்குவதற்காக வருடாந்தம் அரசாங்கம் பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்கிறது. 18 வயதில் இருந்து 55 வயது வரையானவர்கள் அதற்கு பங்களிப்பு செய்வதுடன் அறுபது வயதுக்குப் பின்னர் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

2022 டிசெம்பர் மாதம் வரையில் விவசாய காப்புறுதிக்கு பங்களிப்பு செய்வோராக ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 741 பேர் தகைமை பெற்றுள்ளனர். அந்த வருடத்தில் 453 மில்லியன் ரூபா காப்புறுதியாக வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 2024ஆம் ஆண்டில் 60 வயது பூர்த்தியாகும் நிலையில் காப்புறுதியை பெற்றுக்கொள்ள ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 528 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

2024 மே மாதமளவில் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ள தகுதியான 636 பேர் காத்திருப்பு பட்டியலில் உள்ளனர். எனினும் எந்த வகையிலும் அவர்களது கொடுப்பனவு நிறுத்தப்படவில்லை. அவர்கள் தொடர்பான ஆவணம் உரிய பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், விரைவில் அவர்களுக்கு அந்த கொடுப்பனவு வழங்கப்படும்-என்றார்.

(அ)

# சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்வது தேர்தலை நெருக்கடிக்குள்ளாக்கும்!

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்படவுள்ள நிலையில் ஜனாதிபதியின் பதவி காலம் தொடர்பில் 22 ஆவது திருத்தத்தை கொண்டு வந்து மக்கள் வாக்கெடுப்புக்குச் செல்வது தேர்தல் செயற்பாடுகளை நெருக்கடிக்குள்ளாக்கும். அரசியலமைப்பின் 83(ஆ) உறுப்புரையை திருத்தம் செய்ய வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும் என அரசியலமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.ஆகவே இத்திருத்தம் தற்போது தேவையற்றது என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இன்னும் ஆறு நாட்களுக்குள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவேண்டும். இருப்பினும் மக்கள் மத்தியில் தேர்தல் குறித்து நம்பிக்கையின்மையே காணப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சந்தேகம் ஏற்படுகிறது. நான்கு காரணிகள் செல்வாக்கு செலுத்தின. ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி ஜனாதிபதியின் பதவிக்காலத்தை இரண்டு ஆண்டுகளுக்கு மேலும் நீடிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் கட்சி தவிசாளர் வஜிர அபேவர்தன ஜனாதிபதிக்கு மேலும் 10 ஆண்டுகள் ஆட்சியில் இருக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக குறிப்பிட்டார்.தேர்தலை பிற்போடும் அபாயகரமான பின்னணி ஐக்கிய தேசியக் கட்சிக்கு உண்டு.1982 ஆம் ஆண்டு அரசியல் சூழ்ச்சி ஊடாக பாராளுமன்றத் தேர்தல் ஆறு ஆண்டுகளுக்கு பிற்போடப்பட்டது.

2015 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இரண்டு ஆண்டுகளுக்கு பிற்போடப்பட்டது.அதனைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் காணாமலாக்கப்பட்டது இன்றும் கண்டுப்பிடிக்கப்பட வில்லை.2022 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் காணாமலாக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும்,மாகாண சபைத் தேர்தலையும் பிற்போட்டதைப் போன்று இந்த தேர்தலும் பிற்போடப்படுமா ? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தை கொண்டு வந்து அரசியலமைப்பின் 83 (ஆ) உறுப்புரையில் "ஆறு வருடங்கள் என்பதற்கு பதிலாக ஐந்து வருடம்" என்று மாற்றம் செய்ய திருத்தம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 83(ஆ) உறுப்புரையை திருத்தம் செய்ய வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும் என அரசியலமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு விடுப்பதற்கு ஒரு வாரம் காணப்படுகின்ற நிலையில் மக்கள் வாக்கெடுப்புக்கு செல்லும் அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வரும் போது தேர்தல் குறித்து நியாயமான சந்தேகம் எழுவது சரியானதே, இவ்விடயம் மக்கள் வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டும் என இரண்டு ஜனாதிபதி சட்டத்தரணிகள் உள்ள அமைச்சரவை அறியாமல் இருப்பது பிரச்னைக்குரியதே,22 ஆவது திருத்தம் கொண்டு வருவது அவசியமற்றது-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ரணில் - மகிந்த சந்திப்பு

# ஜனாதிபதி வேட்பாளர் அறிவிப்பு 25ஆம் திகதி

கொழும்பு, ஜூலை 13

**ஆளுங்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் இதுவரை உறுதியான முடிவுகள் எதுவும் எட்டப்படாத சூழலில் எதிர்வரும் 25ஆம் திகதி தமது ஜனாதிபதித் வேட்பாளர் யார் என்பதை சிறீலங்கா பொதுஜன பெரமுன அறிவிக்க உள்ளதாக அறிய முடிகிறது.**

எதிர்வரும் 17ஆம் திகதி நள்ளிரவுடன் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான முழுமையான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்க உள்ளது.

பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் தமது ஜனாதிபதி வேட்பாளர்களை அறிவித்துள்ள பின்புலத்தில் ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுனவில் உட்கட்சி பூசல் காரணமாக ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன.

பொதுஜன பெரமுனவின் அமைச்சரவை அமைச்சர்களில் பெரும்பாலானவர்களும் கட்சியில் ஒரு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக அறிவிக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால், கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச, முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக முன்னிறுத்துவதில் தயக்கம் காட்டிவருகின்றனர்.

பிரபல வர்த்தகர் தம்மிக பெரேராவை வேட்பாளராக நிறுத்தும் நிலைப்பாட்டில் இவர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

ரணில் விக்கிரமசிங்கவிடம் பொதுஜன பெரமுன முன்வைத்த பல்வேறு கோரிக்கைகளை அவர் நிராகரித்தமை மற்றும் பொதுஜன பெரமுனவின் நிபந்தனைகளுக்கு இணங்காமை உள்ளிட்ட காரணிகளால் அரசாங்கத்துக்குள் கடுமையான பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

பிளவுகளை சரி செய்யும் நோக்கில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவந்த போதிலும் அவற்றில் சுமூகமான இணக்கப்பாடுகள் எட்டப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்க, பசில் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உட்பட பொதுஜன பெரமுனவினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் முக்கிய உறுப்பினர்கள் சிலர் கலந்துகொண்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல், ஜனாதிபதி வேட்பாளர் மற்றும் பொதுத் தேர்தல் குறித்து இதன்போது ஆழமான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

பேச்சுவார்த்தை சுமூகமான முறையில் இடம்பெற்றதாகவும் பசில் பல்வேறு நிபந்தனைகளை இதன்போது முன்வைத்தாகவும் தெரியவருகிறது.

என்றாலும், ரணிலின் தரப்பு பசிலின் நிபந்தனைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரியவருவதுடன், மீண்டும் அடுத்த கட்ட பேச்சுகளில் பல்வேறு இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கில் பேச்சுகளை முடிவுக்கு கொண்டுவந்துள்ளனர்.

இவ்வாறான பின்புலத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி பொதுஜன பெரமுன தமது ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்க தீர்மானித்துள்ளது. ரணில் நிபந்தனைகளுக்கு இணங்காவிடின் தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்க பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

தம்மிக்கவின் அரசாங்கத்தில் பிரதமராக நாமல் ராஜபக்சவை நியமிப்பதற்கான இணக்கப்பாடுகள் ஏற்கனவே எட்டப்பட்டுள்ளன. இதனால் எதிர்வரும் 25ஆம் திகதிவரை பொதுஜன பெரமுன ரணிலுக்கு காலக்கெடு விதித்துள்ளதாகவே அக்கட்சியின் வட்டாரங்களில் பேசப்படுகிறது. (அ)

# தமிழ் அரசியல் கைதிகளை பார்வையிட்ட கஜேந்திரன்!

கொழும்பு, ஜூலை 13

வெலிக்கடை மற்றும் மகசீன் சிறைகளுக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விஜயம் செய்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை நேரில் பர்வையிட்டு கலந்துரையாடினார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில்-

வெலிக்கடை மற்றும் மகசீன் சிறைச்சாலையில் உள்ள 9 தமிழ் அரசியல்.கைதிகளை நேரில் சந்தித்தேன். வெலிக்கடையில் தங்கவேலு நிமலன், ஜோ.கொ.வலன்ரினோ, மகசீன் சிறையில் ஆனந்தவர்ணன் (அரவிந்தன்) கடந்த மார்ச் 26 இல் கைது) மகசீன் சிறையில் 15 - 29 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆனந்தசுதாகரன் ஆகியோரைப் பார்வையிட்டேன்.

அவர்களுடைய விடுதலை சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கைகளும் அக்கறையுடன் முன்னெடுக்கப்படவில்லை என்ற கவலை அவர்களுக்கு அதிகமாக உள்ளது. எம்மைப் பொறுத்தவரையில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். அதன்கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

ஆனந்த வர்ணன் வழக்கினை முன்னெடுக்க முடியாத நிலைமையில் உள்ளார். அவர் வேண்டுமென்றே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் உள்ளிட்டவர்களின் விடுதலைக்காக அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்- என்றார். (அ)

# பூஸா சிறைச்சாலையில் சோதனை நடவடிக்கை!

## தொலைபேசிகள், சிம் அட்டைகள் உட்பட பல பொருட்கள் கைப்பற்றல்!

கொழும்பு, ஜூலை 13

பூஸா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது கையடக்கத் தொலைபேசிகள் உட்பட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

சுமார் 70 சிறைச்சாலை அதிகாரிகள் இணைந்து பூஸா சிறைச்சாலையில் நேற்று அதிகாலை விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சிம் அட்டைகள் உட்பட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவர்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கூண்டுகளில் இருந்து இந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# நாடு முழுவதும் வேலைநிறுத்தம் பின்னணியில் ஜனாதிபதி ரணில்!

## சாடுகின்றார் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, ஜூலை 13

இலங்கை முழுவதும் இந்த நாட்களில் வேலை நிறுத்தங்களை முன்னெடுப்பது தேசிய மக்கள் சக்தியல்ல என அக்கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

இந்த வேலைநிறுத்த நடவடிக்கைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்குவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தில் 25,000 ரூபாவினால் சம்பளம் அதிகரிக்கப்படும் என்று கூறியது ஜனாதிபதியே எனவும், 25,000 ரூபா ஒரு பிரிவினருக்கு மாத்திரம் வழங்கப்படாமையால் இவ்வாறு வேலைநிறுத்தங்களை தொழிற்சங்கங்கள் மேற்கொண்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

அரசு ஊழியர்கள் தெருவில் இறங்க வேண்டும் என்பதற்காகவே அரசு இவ்வாறான சிக்கல்களை உருவாக்கியது. செய்ய முடியாது என தொழிற்சங்கங்களையும் அரசியல் கட்சிகளையும் குற்றம் சாட்டுவதில் அர்த்தமில்லை. வாக்குறுதி அளித்தது அரசாங்கமே எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# கிளப் வசந்தவை கொலை செய்தோர் மேலும் பல சம்பவங்களுடன் தொடர்பு?

## விசாரணை அதிகாரிகள் சந்தேகம்

கொழும்பு, ஜூலை 13

கோடீஸ்வர வர்த்தகரான கிளப் வசந்தவின் கொலையில் ஈடுபட்ட துப்பாக்கிதாரிகள் தெற்கில் இடம்பெற்ற மேலும் பல கொலைச் சம்பவங்களோடு தொடர்புடையவர்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக விசாரணை நடத்தி வரும் பொலிஸ் தலைமையக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதனை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தை மேற்கொண்ட துப்பாக்கிதாரிகளின் புகைப் படங்களை கடந்த தினங்களில் அஹுங்கல்லை, பிட்டிகல, எல்பிட்டிய பிரதேசங்களில் இடம்பெற்ற மனிதக் கொலைகளில் ஈடுபட்ட துப்பாக்கிதாரிகளின் சிசிரிவி காட்சிகளுடன் ஒப்பிட்டு பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, தெற்கில் துப்பாக்கிச் சூட்டுகளில் ஈடுபட்டவர்களே க்ளப் வசந்தவின் கொலையிலும் ஈடுபட்டிருக்கலாம் என்பதை உறுதி செய்ய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும், கிளப் வசந்தவின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் சிலர் தெற்கைச் சேர்ந்தவர்கள் என்பதால், துப்பாக்கிதாரிகளும் தெற்கைச் சேர்ந்தவர்கள் என விசாரணை அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

அவர்களின் இலக்கு க்ளப் வசந்த என்பதை அவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டை அவதானிக்கையில் தெரியவருவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், துப்பாக்கிதாரிகள் டுபாயில் இருந்து வழி நடத்தப்பட்டதாகவும் வட்ஸப் ஊடாக தொடர்புகள் பேணப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. (அ)

# மின்மாற்றிகளில் கம்பிகள் வெட்டும் திருட்டுக் கும்பல்!

## பொலிஸ் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 13

நாடளாவிய ரீதியில் காணப்படும் மின்மாற்றிகளில் பொருத்தப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான கம்பிகளை குழுவொன்று திருடிச் செல்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முல்லைத்தீவு மற்றும் களளப்பாடு ஆகிய பிரதேசத்தின் பல இடங்களில் இந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீதியில் பயணித்த ஒருவரினால் முல்லைத்தீவு மின்சார சபை அலுவலகத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அதிகாரிகள் பொலிஸாருடன் வந்த நிலையில், சந்தேக நபர்கள் [illegible] சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், சந்தேக நபர்கள் கம்பிகளை வெட்டுவதற்கு பயன்படுத்திய இரண்டு கத்திகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த நிலையில், சுமார் 8 மின்மாற்றிகளில் பொருத்தப்பட்டிருந்த கம்பிகள் அறுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, புதிய கம்பிகளை பொருத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “வன்முறைகளுக்கு முகங்கொடுக்கும் சிறுவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும்”



கல்முனை, ஜூலை 13

**வன்முறைகளில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதும் வன்முறைக்குள்ளான சிறுவர்களைப் பராமரித்து அவர்களுக்கான சேவைகளை திறம்பட வழங்குவதற்கும் துறைசார்ந்த அதிகாரிகள் முன்வர வேண்டும்- இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகிலா இஸ்ஸடீன் வலியுறுத்தியுள்ளார்.**

கல்முனை பிராந்தியத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் மற்றும் வன்முறைகளில் இருந்து அவர்களைப் பாதுகாத்து, பராமரிப்பது தொடர்பில் துறைசார்ந்தவர்களுடனான உயர்மட்ட கலந்துரையாடல் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சிறுவர்களுடைய பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பில் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். வன்முறைகளில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதும் வன்முறைக்குள்ளான சிறுவர்களைப் பராமரித்து அவர்களுக்கான சேவைகளை திறம்பட வழங்குவதற்கும் துறைசார்ந்த அதிகாரிகள் முன்வர வேண்டும். அது அவர்களின் கடமையும் பொறுப்புமாகும். அந்த வகையில் சகல நிறுவனங்களும் ஒன்றுபட்டு செயல்படும் போது மாத்திரமே சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைக்க முடியும். அத்துடன் பாதிக்கப்படுகின்ற சிறுவர்களையும் பராமரித்து அவர்களுக்கு சிறந்த ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும்- என்றார். (எ)

# புதிய மூன்று மாடி வகுப்பறை கட்டடத்துக்கான ஆரம்ப நிகழ்வு



கல்முனை, ஜூலை 13

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச். எம். முகம்மட் ஹரீஸின் முயற்சியின் பயனாக கல்வி அமைச்சின் 4. 9 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கல்முனை அல் - அஸ்கர் வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்துக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. (எ)

# இளைஞர்களுக்கு வலுவூட்டல்

நிந்தவூர், ஜூலை 13

உள சமூக பிரச்னைகள் தொடர்பில் இளைஞர்களை விழிப்புணர்வூட்டும் செயலமர்வு நிந்தவூர் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எம். ரி. சரீப் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் உள வளத் துணை உத்தியோகத்தர் எம். ஹப்ரத் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட உள வளத் துணை இணைப்பாளர் மனுஷ் அபூபக்கர் கலந்து கொண்டு விரிவுரையை நிகழ்த்தினார். (எ)

பெறுபேறு நிறுத்தம் பரிகார நடவடிக்கையை

# மனிதவுரிமை ஆணைக்குழு தொடர்ந்து கண்காணிக்கும்

திருகோணமலை, ஜூலை 13

திருகோணமலை ஸாஹிரா கல்லூரி விவகாரம் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பரிகார நடவடிக்கைகள் உரியவாறு முன்னெடுக்கப்படுகின்றனவா? என்று தாம் கண்காணிக்க உள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் கல்லூரியில் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 70 முஸ்லிம் மாணவிகளின் பெறுபேறுகள், அவர்கள் காதை மறைக்கும் விதமாக ஹிஜாப் அணிந்து வந்ததாகக் குறிப்பிட்டு உரிய காலப்பகுதியில் வெளியிடப்படாமல் இடைநிறுத்தி வைக்கப்பட்ட (தற்போது வெளியிடப்பட்டுவிட்டது) சம்பவம் குறித்து கடந்த 8 ஆம் திகதி பரீட்சைகள் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் அதிகாரிகளுடன் கலந்துரையாடலை முன்னெடுத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இவ்விடயத்தில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# சம்மாந்துறை வலய மட்ட விளையாட்டுப் போட்டி





சம்மாந்துறை, ஜூலை 13

சம்மாந்துறை வலய மட்ட விளையாட்டுப் போட்டி நேற்று சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ. முஸ்ரக்அலி தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார் கலந்து சிறப்பித்தார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக பிரதிக் பணிப்பாளர்களான யசீர் அரபாத், நிலோபரா நுஸ்ரத், சியாட், இறக்காமம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மகுமூதுலெவ்பை, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ)

# பொலிஸாரின் பாவனையில் இருந்த கலாசார மண்டபம் மாநகர சபையிடம்

பெரிய நீலாவணை, ஜூலை 13

பொலிஸாரின் பாவனையில் இருந்து வந்த பெரிய நீலாவணை கலாசார மண்டப வளாகம் கல்முனை மாநகர சபையால் முழுமையாக பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபைக்குச் சொந்தமான இந்த வளாகம் மாநகர ஆணையாளர் என். எம். நௌபீஸின் வேண்டுகோளின் பேரில் - பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்தால் கையளிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பெரிய நீலாவணை கலாசார மண்டப வளாகத்தில் இருந்து பொலிஸார் வெளியேறியுள்ளதுடன் பொலிஸாரின் விடுதி வசதிக்காக கல்முனை மாநகர சபையால் மாற்று இடம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தக் கலாசார மண்டபத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ)

# 13 முஸ்லிம் அதிபர்களின் பெறுபேறு இடைநிறுத்தம்

திருகோணமலை, ஜூலை 13

13 முஸ்லிம் அதிபர்களின் வினைத்திறன் தடைகாண் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவுடன் நான் நீண்டகாலம் இணைந்து பணியாற்றியுள்ளேன். அந்தவகையில், அவர் இனவாதி அல்ல. இன, மத பேதமின்றி அனைத்து மக்களையும் சமமாக நடத்துபவர்.

எனவே, கல்வித் திணைக்களம் மற்றும் பரீட்சை திணைக்களம் ஆகியவற்றில் இடம்பெறும் குளறுபடியான நடவடிக்கைகளுக்கும் பாரபட்சமான அணுகுமுறைகளுக்கும் சில அதிகாரிகளே காரணம் என்பதை என்னால் கூற முடியும். எனவே, இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்னைகள் வராமல் தடுப்பதற்காக சுற்றுநிருபம் ஒன்றை உடனடியாக வெளியிடுவது சிறந்ததாகும் எனவும் ரிஷாத் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில், நிலைமையை ஆராய்ந்து, அதிபர்களின் பரீட்சை பெறுபேறுகளை ஒரு வாரத்துக்குள் வெளியிட நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (எ)



# தேர்த்திருவிழா

மட்டக்களப்பு, ஜூலை 13

மட்டக்களப்பு கல்லடி - உப்போடை, நொச்சிமுனை அருள்மிகு சிறீ சித்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழாவின் இரதோற்சவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஜூலை 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்தத் திருவிழா கடந்த 10 தினங்களாக நடைபெற்று, 10 ஆம் நாளான நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தீ மிதிப்பு நடைபெற்றதையடுத்து தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவுபெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளத்தில் 63 பயணிகளுடன் ஆற்றில் கவிழ்ந்த பேருந்துகள்!



காத்மண்டு, ஜூலை 13

**நேபாளத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக, திரிசூலி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் மதன் - ஆஷ்ரித் நெடுஞ்சாலையில் நிலச்சரிவு ஏற்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 3. 30 மணியளவில் வீதியில் சென்று கொண்டிருந்த இரண்டு பேருந்துகள் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டன.**

இந்த பேருந்துகளில் 63 பயணிகள் இருந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பேருந்தில் இருந்த பயணிகளைத் தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

இந்த நிலையில், நேபாள பிரதமர் புஷ்பா கமல் தஹல் கூறுகையில், "நாராயண்காத் - முகிலின் வீதிப் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் பேருந்து அடித்துச் செல்லப்பட்டதில் பல பயணிகளைக் காணவில்லை என்ற செய்தியை அறிந்து மிகுந்த வருத்தமடைகிறேன். நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளதால், பயணிகளைத் தேடித் திறம்பட மீட்கும்படி, உள்துறை நிர்வாகம் உட்பட அரசாங்கத்தின் அனைத்து துறைகளுக்கும் அறிவுறுத்தியுள்ளேன்.

வானிலை மோசமாக இருப்பதால் காத்மண்டுவில் இருந்து சித்வானின் பரத்பூருக்குச் செல்லும் அனைத்து விமானங்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன- என்றார்.

இந்த விபத்தில் 7 இந்தியர்கள் உயிரிழந்தனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (எ)



# காஸா நகரை விட்டு 3 இலட்சம் பலஸ்தீனர்கள் வெளியேறினர்!

## அழிக்கப்படும் அகதி முகாம்கள்

காஸா, ஜூலை 13

இஸ்ரேல் இராணுவத்தின் எச்சரிக்கை காரணமாக காஸா நகரை விட்டு 3 இலட்சம் பலஸ்தீனர்கள் வெளியேறியுள்ளனர்.

இதேவேளை, மக்கள் வெளியேறும்போது இஸ்ரேல் படையினரால் சுட்டுக் கொல்லப்படுவதாகவும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

"எங்கள் அகதி முகாம்கள் பெரும் அழிவுக்கு உள்ளாகியுள்ளன. பலஸ்தீன மக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள், அவர்களின் வாழ்க்கை எவ்வாறு செல்கிறது என்பது யாருக்கும் தெரிவதில்லை. இந்தப் பிரச்னையை தீவிரமாக விசாரிக்க வேண்டும். இஸ்ரேலிய குடியேற்றங்களை விரிவுபடுத்துவது சட்டவிரோதமானது, ஏற்றுக்கொள்ள முடியாதது. காஸாவின் நிலைமை மிகவும் சோகமாக உள்ளது" என்று பலஸ்தீன பிரதமர் முகமது முஸ்தபா கவலை வெளியிட்டுள்ளார். (எ)

# உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யா வெற்றி பெற முடியாது

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உறுதி



வாஷிங்டன், ஜூலை 13

ரஷ்யாவை எதிர்த்து போரிட்டு வரும் உக்ரைனுக்கு இன்னும் ஆயுதங்களை வழங்குவோம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

நேட்டோ அமைப்பின் 75ஆவது ஆண்டு விழாவை யொட்டி அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் நேட்டோ உச்சி மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் நேட்டோ உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இதில் ஜோ பைடன் உரையாற்றினார். அப்போது, வரவிருக்கும் மாதங்களில் அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் உக்ரைனுக்கு கூடுதல் வான் பாதுகாப்பு அமைப்புகள் உட்பட ஏராளமான ஆயுதங்களை வழங்க முடிவு செய்துள்ளன.

நாங்கள் முக்கியமான வான் பாதுகாப்பு இடைமறிப்புகளை ஏற்றுமதி செய்யும் போது, போரில் உக்ரைன் முன்னோக்கி செல்வது உறுதி செய்யப்படும். இந்தப் போரில் ரஷ்யா தோல்வியடைந்து வருகிறது. 2 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் புடினின் விருப்ப போரில், அவரது இழப்புகள் அதிர்ச்சியளிக்கின்றன. இந்தப் போரில் 3 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரஷ்ய படையினர் பலியாகினர்.

10 இலட்சம் ரஷ்யர்கள், பெரும்பாலும் இளைஞர்கள் ரஷ்யாவை விட்டு வெளியேறியுள்ளனர், ஏனெனில் அவர்கள் ரஷ்யாவில் எதிர்காலத்தை காணவில்லை. போர் தொடங்கியபோது 5 நாட்களில் உக்ரைன் வீழ்ந்துவிடும் என்று புடின் நினைத்தார். இரண்டரை ஆண்டுகள் கடந்து உக்ரைன் நிலைத்து நிற்கிறது, தொடர்ந்தும் நிற்கும். இந்தப் போருக்கு முன், நேட்டோ உடைந்து விடும் என்று புடின் நினைத்தார் என்பது அனைத்து நட்பு நாடுகளுக்கும் தெரியும். இன்று நேட்டோ அதன் வரலாற்றில் இருந்ததை விட பலமாக உள்ளது. இந்த அர்த்தமற்ற போர் தொடங்கிய போது, உக்ரைன் ஒரு சுதந்திர நாடாக இருந்தது. இன்றும் அது சுதந்திர நாடாகவே உள்ளது. இந்தப் போரில் ரஷ்யா வெற்றி பெறாது. உக்ரைனே வெற்றி பெறும். உலக பாதுகாப்பின் அரணாக நேட்டோ உள்ளது என்பதை நினைவில் நாம் கொள்வோம்- என்றார். (எ)

# உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியை 'புடின்' என்று அழைத்தார் ஜோ பைடன்

வாஷிங்டன், ஜூலை 13

அமெரிக்காவில் நடைபெற்ற நேட்டோ உச்சி மாநாட்டில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கியை 'புடின்' என்று கூறி அறிமுகம் செய்தார் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்.

இந்த நிலையில் அடுத்த சில நொடிகளில் அதை திருத்திச் சொன்னார். இது இப்போது உலக அளவில் கவனம் பெற்றுள்ளது.

ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்கு உதவும் வகையில் 'உக்ரைன் மீள் எழுச்சி' என்ற உடன்படிக்கை நேட்டோ அமைப்பின் 32 உறுப்பினர்கள் முன்னிலையில் அறிவிக்கப்பட்டது. இதில் பைடன் பங்கேற்றார். அப்போது 'புடின்' என்று கூறி ஜெலென்ஸ்கியை பேச அவர் அழைத்தார்.

"உக்ரைன் ஜனாதிபதியை நான் அழைக்கிறேன். அவர் தைரியம் மிக்கவர் மற்றும் உறுதித்தன்மை கொண்டவர். ஜனாதிபதி புடினை வரவேற்கிறேன்" என பைடன் கூறினார். அதன் பின்னர் மேடையை விட்டு இறங்கிய போது தனது தவறை அறிந்து 'ஜனாதிபதி புடினை ஜெலென்ஸ்கி வீழ்த்துவார்' என்று கூறி சமாளித்தார். (எ)



# நேட்டோவின் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்த சீனா

வாஷிங்டன், ஜூலை 13

ரஷ்யாவை சீனா இயக்குகிறது என்று பகிரங்கமாக குற்றஞ்சாட்டிய நேட்டோவுக்கு தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ள சீனா, இந்த குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ளது.

அமெரிக்காவில் நேட்டோ உச்சி மாநாடு நடைபெற்றது. இதில் நேட்டோவின் 32 உறுப்பு நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றனர். இந்த மாநாட்டில் ரஷ்யா - உக்ரைன் போர் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து நேட்டோ தலைவர்கள் தீவிரமாக ஆலோசித்தனர். மாநாட்டின் நிறைவாக உறுப்பு நாடுகளின் தலைவர்கள் 32 பேரும் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அதில், சீனா மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்து கடுமையாக விமர்சித்தனர்.

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு ஒரு தீர்க்கமான உதவியாளராக இருந்து ரஷ்யாவை சீனா இயக்குகிறது.

எனவே ரஷ்யாவின் போர் முயற்சிகளுக்கு உதவும் விதமாக அந்த நாட்டுக்கு வழங்கி வரும் அனைத்து பொருள் மற்றும் அரசியல் ஆதரவை சீனா உடனடியாக நிறுத்த வேண்டும்- இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதனிடையே நேட்டோ அமைப்பின் இந்தக் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ள சீனா, நேட்டோவுக்கு தனது கடும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது. (எ)

# பகவத்கீதை மீது சத்தியம் செய்து எம். பியாக பதவியேற்றார் ஷிவானி

லண்டன், ஜூலை 13

பிரிட்டன் பாராளுமன்றத்தில் 'பகவத் கீதை' மீது சத்தியம் செய்து பதவியேற்றுள்ளார் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஷிவானி ராஜா.

அண்மையில் அந்த நாட்டில் நடைபெற்ற தேர்தலில் லீசெஸ்டர் கிழக்கு தொகுதியில் போட்டியிட்டு ஷிவானி வெற்றி பெற்றார். இந்தத் தொகுதி தொழில் கட்சியின் கோட்டையாக கடந்த தேர்தல்களில் இருந்துள்ளது. இந்தச் சூழலில் ஷிவானி அங்கு வெற்றி பெற்றுள்ளார். அவர் கன்சர்வேடிவ் கட்சி சார்பில் போட்டியிட்டவர்.



இந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினராக லீசெஸ்டர் கிழக்கு தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துவது தனக்குப் பெருமையாக இருப்பதாகவும், பகவத் கீதையின் மீது சத்தியம் செய்து பதவியேற்பதாக எக்ஸ் தளத்தில் ஷிவானி தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தேர்தலை பிற்போடவேண்டிய தேவை அரசுக்கு கிடையாது!

## ஒக்ரோபர் 5 அல்லது 12இல் தேர்தல் நிச்சயம் நடக்கும் என்கிறார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூலை 13

**தேர்தலைப் பிற்போட வேண்டிய தேவை அரசாங்கத்திற்குக் கிடையாது எனவும், ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி அல்லது 12 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் ஆகியன குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிச்சயமாக நடைபெறும் என்பதை ஜனாதிபதி தொடர்ச்சியாக வலியுறுத்தியிருந்தார்.

இதன்பிரகாரம் முதலாவதாக ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும். தேர்தல் செலவீனங்களுக்காக நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில், ஒக்டோபர் மாதம் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி அல்லது 12 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும்.

தேர்தலை பிற்போடவேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது. கடந்த இரண்டு வருடங்களில் இந்த நாட்டை வீழ்ச்சிப்பாதையில் இருந்து மீட்டெடுக்க ஜனாதிபதி மேற்கொண்ட வேலைத்திட்டங்களை மக்கள் நன்கு அறிவார்கள்.

அரசாங்கம் என்ற ரீதியில் நாம் தேர்தலுக்கு தயாராகவே உள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் ஜனாதிபதியாக தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்பதே நாட்டுமக்களின் எதிர்ப்பார்ப்பாகும்-என்றார்.

(அ)

# பாதாளக் குழுவினரைக் கட்டுப்படுத்த எதிர்க்கட்சியும் ஒத்துழைக்கவேண்டும்

## பிரசன்ன ரணதுங்க கோரிக்கை

கொழும்பு, ஜூலை 13

"பாதாளக் குழுவினரை கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு எதிர்க்கட்சியினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றிய போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவது எமது பொறுப்பாகும்.

எனினும், கடந்த காலங்களில் பாதாள உலக்குழுவினரைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டபோது எதிர்க்கட்சியினர் கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டார்கள்.

கடந்த காலங்களில் காலி முகத்திடலில் அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களின்போது, போராட்டக்காரர்களுக்கு தினமும் பிரியாணி வழங்கப்பட்டது.

இதனை யார் வழங்கியது? இந்த பாதாள உலகக்குழுவினர்தான். அவர்களிடம்தான் இவ்வளவு பணம் இருக்கிறது. நாட்டில் போதைப்பொருள் மற்றும் வன்முறை கலாசாரத்தை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு எதிர்த்தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் -என்றார்.

(அ)

# மழை நிலைமை அதிகரிக்கும்!

கொழும்பு, ஜூலை 13

நாட்டின் தென்மேற்குப் பகுதியில் அடுத்த சில நாட்களுக்கு மழை நிலைமை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மி.மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

(அ)

# குற்றவாளிகள் இருவர் நாடு கடத்தப்பட்டனர்!

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைச் செய்விட்டு டுபாயில் பதுங்கியிருந்த இரண்டு இலங்கையர்கள் அந்த நாட்டில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அதன்படி நேற்று அதிகாலை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் நான்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் குழுவினால் சந்தேக நபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

கொழும்பு, நுகேகொடை பிரதேசத்தை சேர்ந்த 48 வயதான களுதுர தினேஷ் சமந்த டி சில்வா என அழைக்கப்படும் "பாபி" மற்றும் 26 வயதான கங்கனம்ல திமுத்து சதுரங்க பெரேரா, மட்டக்குளி, சமித்புர பிரதேசத்தை சேர்ந்த இரண்டு குற்றவாளிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கங்கணம்ல திமுத்து சதுரங்க பெரேரா கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரிடமும், களுதுர தினேஷ் சமந்த டி சில்வா கொழும்பு நாரஹேன்பிட்டி படுகொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடமும் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# டயானா கமகேக்கு எதிராக வழக்கு!

கொழும்பு, ஜூலை 13

குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறி போலி தகவல்களை சமர்ப்பித்து வெளிநாட்டு கடவுச்சீட்டினை பெற்றுக்கொண்ட முன்னாள் அமைச்சர் டயனா கமகேயுக்கு எதிராக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் நேற்று இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

பிரதம நீதிவான் விடுமுறையில் சென்றுள்ளமையால் குற்றப்பத்திரிக்கை வாசிப்பு நேற்று ஒத்திவைக்கப்பட்டது.

இதனையடுத்து முன்னாள் அமைச்சர் டயனா கமகேயுக்கு எதிரான குற்றப்பத்திரிக்கை வாசிப்பு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முன்னெடுக்கப்படும் என கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனுவெல தெரிவித்தார்.

இதேவேளை, குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள நபரின் இராஜதந்திர கடவுச்சீட்டை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

(அ)

# கொழும்பில் 50,000 அடுக்குமாடி உரிமையாளர்களுக்கு உறுதிகள்

கொழும்பு, ஜூலை 13

கொழும்பு மாவட்டத்தில் உள்ள 50,000 அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்களுக்கு உறுதிப் பத்திரங்களை வழங்கும் ஆரம்பக் கட்ட நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இது தொடர்பான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான மிஹிந்து செத்புர, சிரிசர உயன மற்றும் மெட்ரோ வீட்டுத் தொகுதிகளின் அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்களுக்கும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு உட்பட்ட வீட்டுத் தொகுதிகளில் வசிக்கும் சுமார் 1,500 பேருக்கும் உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

பெரும்பாலான அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்களுக்குரிய உறுதிப் பத்திரம் இல்லாததால் பல பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது.

இந்த உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்குச் சட்டமா அதிபரிடம் ஆலோசனை நடத்தப்பட்டதாகவும், கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் சான்றிதழ் பெற்ற அனைத்து அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் இந்த உறுதிப் பத்திரம் வழங்கப்படவுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

(அ)

# சிறைக்குள் கைதி தாக்கியதில் பொலிஸ் பரிசோதகர் படுகாயம்!

கொழும்பு, ஜூலை 13

இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலிஸ் பரிசோதகர் ஒருவர் சிறையில் இருந்த மற்றுமொரு கைதியினால் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இதன்போது குறித்த கைதி பொலிஸ் பரிசோதகரின் வாயை கூரிய ஆயுதம் கொண்டு வெட்டியுள்ளார் எனவும், இதனால் காயமடைந்த பொலிஸ் பரிசோதகருக்கு 8 தையல்கள் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலுக்கான காரணம் இதுவரை வெளிவராத நிலையில் இது குறித்த தீவிர விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# கிளப் வசந்தவின் இறுதிச்சடங்கு; மலர்ச்சாலைக்கு கடும் மிரட்டல்!

கொழும்பு, ஜூலை 13

அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்ட வர்த்தகர் கிளப் வசந்தவின் சடலத்தை பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்க வேண்டாமென பொரளையில் உள்ள பிரபல மலர்ச்சாலைக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொரளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அழைப்பை மேற்கொண்ட நபரின் தொலைபேசி இலக்கம் மலர்ச்சாலையின் தொலைபேசியில் பதிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் நீதிமன்ற உத்தரவிற்கமைய தொலைபேசி ஆய்வு அறிக்கையினைப் பெற்று விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழின்...

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசிய அவர்,

வட பகுதி விவசாயிகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார். விவசாயிகள் அரச துறையில் உள்ளவர்கள் அல்லர். எனினும் அவர்கள் நாட்டுக்கு செய்யும் பெரும் பங்களிப்பை விலை மதிக்க முடியாது என்றும் கூறினார். (ஐ)

## ஜே.வி.பி...

ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது.

இந்த நிலையில், பிரசாரங்களில் ஈடுபட்டுவரும் அநுரகுமாரவுக்கு அந்தக் கட்சியியிலுள்ள ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமையவே அநுரவின் பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வரும் நாட்களில் அநுரகுமாரவின் தேர்தல் பிரசார கூட்டங்கள் மற்றும் மக்கள் சந்திப்புகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்கும். அத்துடன், அந்தக் கட்சியின் முன்னணி தலைவர்களின் பாதுகாப்பும் அதிகரிக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## யுனெஸ்கோ...

அசோலே உத்தியோகபூர்வ பயணமாக எதிர்வரும் செவ்வாய்கிழமை இலங்கை வருகிறார்.

அரசின் அழைப்பில் நாட்டுக்கு வருகை தரும் யுனெஸ்கோ தலைவர் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நாட்டில் தங்கியிருப்பார்.

இந்தக் காலப்பகுதியில், யுனெஸ்கோவில் இலங்கை இணைந்த 75 ஆண்டுகள் நிறைவு விழாவிலும் பங்கேற்பார். அத்துடன், யுனெஸ்கோ அமைப்பால் உலக மரபுரிமையாக பிரகடனப் படுத்தப்பட்ட இலங்கையிலுள்ள இடங்களையும் அவர் பார்வையிடுவார்.

இதன்போது அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கொக்குத்...

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் நடந்த இந்த ஆய்வில் நேற்றைய தினம் மேலதிகமாக 3 எலும்புக்கூடுகள் அடை யாளம் காணப்பட்டன. அத்துடன், துப்பாக்கி தோட்டாக்களும் மீட்கப் பட்டன.

மூன்றாவது கட்ட ஆய்வில் 7 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. முன்னதாக இரு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 40 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 87 கிலோ...

வவுனியாவை சேர்ந்த 47 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட் டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கொடிகாமத்தில் வசிக்கும் நபர் ஒருவரே தனக்குக் கஞ்சாவை தந்தார் என்று வாக்குமூலம் அளித்தி ருந்தார்.

இதையடுத்து, கொடிகாமத்தில் அந்த நபரின் வீடு நேற்று வெள்ளிக் கிழமை அதிகாலை சுற்றிவளைக்கப்பட் டது. இதன்போது, 87.67 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.

பிரதான சந்தேகநபர் அங்கிருந்து தப்பியோடிய நிலையில் வீட்டிலிருந்த சந்தேகநபரின் தாயார் கைது செய்யப்பட்டார்.

கைதான இருவரையும் நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். இதன் போது, இருவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

தப்பியோடியவரை கைது செய்ய சாவகச்சேரி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## தேர்தல்கள்...

கையொப்பங்களுடனான இந்தக் கோரிக்கைக் கடிதத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் நேற்று வழங்கினார். (ஐ)

## புளியங்கூடல்...

இதன்போது, “பிள்ளையாரின் நகை, பணம் திருடியவனை வீதிக்குக் கொண்டு வா” என்று கூறியவாறு சிதறுதேங்காய் அடித்தனர்.

இதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போராட்டக்காரர்கள்.

ஆலய பெருந்திருவிழாவின் இறுதி நாளன்று நகை, பணப் பெட்டகத்தின் திறப்பு தொலைந்துவிட்டதாக ஆலய நிர்வாகத் தலைவர் சிலருக்குக் கூறியுள்ளார். எனினும், அது குறித்து உடனடியாக பொலிஸாருக்கோ அல்லது உபயகாரர்களுக்கோ தகவல் வழங்கவில்லை.

சில நாட்களின் பின்னர் பெட்டகத்திலிருந்த 60 பவுணுக்கும் மேற்பட்ட நகைகள், பணம் என்பவற்றை காணவில்லை என்று ஆலய தலைவர் கூறியுள்ளார்.

பெட்டகத்தின் பூட்டு உடைக்கப்படாமல் அதிலிருந்த நகைகளும் பணமும் எவ்வாறு காணாமல் போயின என்று ஊர் மக்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு அவர் தனக்கு தெரியாது என்று பதிலளித்துள்ளார் என்று தெரிவித்த போராட்டக்காரர்கள், நகைகளையும் பணத்தையும் ஆலய நிர்வாகத்தினரே திருடினர் என்று எமக்கு சந்தேகம் உள்ளது என்றும் கூறினர்.

மேலும், பெட்டகத்தின் திறப்பு காணாமல் போய்விட்டது என்று தெரிந்ததும் அனைவரையும் அழைத்து அவர்கள் முன்பாக பெட்டகத்தின் பூட்டை உடைத்து அதிலிருந்த நகைகளை வேறொரு பெட்டகத்துக்கு மாற்றியிருக்க வேண்டும். ஆனால், அதனை அவர்கள் செய்யவில்லை. இந்தக் களவு நிர்வாகத்துக்குத் தெரிந்தே இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகம் உள்ளது. பொலிஸார் காலத்தை இழுத்தடிக்காமல் விசாரணை நடத்தி உரியவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் - என்றனர்.

இந்த விடயம் குறித்து ஊர்காவற்றுறை பிரதேச செயலர் சதீசன் மஞ்சுளா தேவியிடம் கேட்டபோது, “அந்த ஆலயத்தில் நகை பணம் காணாமல் போனமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்” - என்றார். (ஐ)

## இடைநிறுத்த...

தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தை கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை பறிக்கும் வகையில் அரசமைப்பின் 70ஆவது சரத்து திருத்தப்பட்டுள்ளதாக மனுதாரர் கூறியுள்ளார்.

இந்தத் திருத்தத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அங்கீகாரம் கிடைக்காததாலும் ஜனாதிபதி கையொப்பமிடாததாலும் இந்தத் திருத்தத்தை சட்டமாகக் கருத முடியாது. எனவே, 19ஆவது திருத்தச் சட்டத்தை தொடர்ந்தும் சட்டமாக ஏற்றுக் கொள்வது தவறானது எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்த உத்தரவிடக்கோரி அண்மையில், சமிந்திர தயான் லெனவ என்பவர் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான நீதியரசர்கள் ஆயத்தால் தள்ளுபடி [illegible] குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கைக்கு வழங்கும் கடனை மானியமாக மாற்றும் இந்தியா!

கொழும்பு, ஜுலை 13

இலங்கைக்கு புதிய கடன் திட்டங்களை வழங்குவதை இந்திய அரசாங்கம் நிறுத்தியுள்ளது. இந்தக் கடன்களை மானியமாக - இணைப்பு திட்டம் போன்ற முதலீட்டு திட்டங்களாக அந்த நாடு மாற்றியுள்ளது என்று அறிய வருகிறது.

இலங்கைக்கு இரு தரப்பு கடன் வழங்கும் மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியா மற்றும் பிற நாடுகளுடனான இரு தரப்பு கடன் மறுசீரமைப்பை இலங்கை சமீபத்தில் நிறைவு செய்தது.

இந்த நிலையில் புதிய கடன்களை வழங்குவதற்கு பதிலாக மானிய திட்டங்கள், இணைப்பு திட்டங்கள் போன்ற முதலீட்டு அடிப்படையிலான திட்டங்களையே இந்தியா வழங்கும் என்றும் கூறப்படுகின்றது.

மாகோ - அநுரதபுரம் புகையிரத திட்டம் இந்திய கடனில் முதன்மையானது. இதற்கு ஒரு கோடியே 49 இலட்சம் டொலர்கள் வழங்கப்பட்டது. இந்த நிலையில், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி திட்ட கடனான 6 கோடி டொலர்களை மானியமாக மாற்றியுள்ளது.

இதேவேளை, பொருளாதார நெருக்கடியால் முடங்கிய 11 ஜப்பானிய திட்டங்கள் மீண்டும் தொடங்கப்படும் என்று ஜப்பான் அறிவித்தது. எனினும் நாட்டின் நிலைமை திருப்திகரமாக மேம்படும் வரை புதிய யென் கடன்கள் அனுமதிக்கப்படாது என்று கூறியுள்ளது. (ஐ)

# கூட்டணியை மக்கள் மயமாக்க ஐக்கிய மக்கள் சக்தி திட்டம்!

கொழும்பு, ஜுலை 13

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு பின்னர் அறிவிக்கப்படவுள்ள நிலையில், இந்த மாத இறுதிக்குள் மிகப்பெரிய கூட்டணியை மக்கள் மயப்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என்றும், கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

ஆளும் தரப்பு மற்றும் இதர கட்சிகளில் இருந்து 10இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணையவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவித்தல் வெளியான பின்னர் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்காக சஜித் பிரேமதாஸ நேரடி பேச்சுகளில் ஈடுபடுவார்.

இதேவேளை, சுதந்திர மக்கள் சபையை ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியில் இணைப்பது தொடர்பான உடன்படிக்கை விரைவில் கைச்சாத்தாகும் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## தமிழ் பொதுவேட்பாளர்...

அத்துடன், தமிழ் பொது வேட்பாளரை களமிறக்குவதில் தமிழ் சிவில் அமைப்புகள், வடக்கு - கிழக்கை சேர்ந்த தமிழ்த் தேசிய கொள்கைசார் கட்சிகள் ஒன்றுபட்டுள்ளன. இலங்கை தமிழ் அரசு கட்சி இது விடயத்தில் இரண்டுபட்டுள்ளது. எனினும், ஒரு பகுதியினர் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றனர். ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் காலம் உள்ளதால் தமிழ் அரசுக் கட்சி பொது இணக்கம் ஒன்றுக்கு வரக்கூடும் என்றும் அவர்கள் இந்தியத் தூதுவரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்தியத் தூதுவரின் இல்லத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணி தொடக்கம் சுமார் ஒன்றரை மணி நேரம் நடந்த இந்த சந்திப்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தி ரெலோ கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், கோவிந்தன் கருணாகரம், புளொட் கட்சியின் வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் சிவநேசன், ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேசமசந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்த சந்திப்பில் பங்கேற்றவர்கள் இந்தியத் தூதுவரிடம்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள சிங்கள சமூகத்தைச் சேர்ந்த எந்த வேட்பாளரும் தமிழ் மக்களுக்கு தீர்க்கமான - திட்டவட்டமான - உறுதியான தீர்வை வழங்க முன்வரவில்லை. தமிழ் மக்களின் காணிகள் அபரிக்கப்படுகின்றன. தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் இன விகிதாசாரம் மாற்றியமைக்கப்படுகின்றது. தமிழ் மக்களின் வழிபாட்டு உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இந்து ஆலயங்கள் பௌத்த விகாரைகளாக மாற்றப்படுகின்றன. கடந்த பல காலங்களாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் இந்த செயல்கள் ஜனாதிபதி ரணிலின் காலத்திலும் தொடர்கின்றன. அவற்றை நிறுத்த அவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

இதேநேரம், தமிழ் மக்களுக்கு 13ஆம் திருத்தச் சட்டத்திலுள்ள அதிகாரங்களை தருவேன் என்று கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் அதிகாரத்தை வழங்க மறுக்கிறார். மறைந்த தலைவர் இரா. சம்பந்தனின் இறுதிச் சடங்கில் பங்கேற்றபோதும் அவர் இதனையே தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவராக உள்ள சஜித் பிரேமதாஸவும் தமிழ் மக்களுக்கு தான் வழங்கத் தயாராகவுள்ள அதிகாரங்கள் குறித்து திட்டவட்டமாகக் கூறவில்லை.

எனவே, வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நாங்கள் நிறுத்துவது அவசியமானது.

கடந்த காலங்களில் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே தமிழ் மக்களின் ஆதரவைக் கோருவது சிங்கள வேட்பாளர்களின் வழக்கமாகும். ஆனால், தற்போது தேர்தல் அறிவிப்புக்கு முன்னதாகவே - 3 மாதங்களுக்கு முன்னதாகவே சிங்கள வேட்பாளர்கள் யாழ்ப்பாணத்துக்கு அணி திரண்டு வந்து ஆதரவை கோருகின்றனர். தமிழ் பொது வேட்பாளர் விவகாரமே இந்த மாற்றத்தை ஏற்படுத்தியது. சிங்கள வேட்பாளர்களை மாற்றத்துக்கு உட்படுத்தக் கூடியதாகவும் - அவர்கள் தமிழ் மக்களின் பிரச்னைத் தீர்வு விடயத்தில் உறுதியான - திடமான முடிவு எடுக்கவும் உறுதிமொழிகளை வழங்கவும் தமிழ் பொது வேட்பாளர் அவசியமானது என்று வலியுறுத்தினர்.

இந்த சந்திப்பில், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, பலாலி விமான நிலைய விரிவாக்கம், மன்னார் பொது மருத்துவமனைக்கு வளங்கள் விரிவாக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் பேசப்பட்டன என்று அறிய வருகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# என்புமச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஆரம்பம்!





யாழ்ப்பாணம், ஜுலை 13

இரத்த புற்றுநோய் மற்றும் அதனோடு இணைந்த நோய்களுக்கான சிகிச்சைகளுக்கு வழங்க கூடிய என்பு மச்சை மாற்று சத்திர சிகிச்சை நிலையம் யாழ். போதனா வைத்திய சாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஸ் பத்திரனவால் எதிர்வரும் கிழமை வைபவ ரீதியாக குறித்த சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்படவுள்ள தாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்திய மூர்த்தி அறிவித்துள்ளார்.

இலங்கையில் இவ்வாறான சிகிச்சை நிலையம் மகரகம வைத்தியசாலை மற்றும் கொழும்பு சிறுவர் வைத்தியசாலை ஆகிய இரண்டில் மாத்திரம் காணப் படுகின்றது.

இது இலங்கையின் மூன்றாவது நிலையமாக பதிவு பெறுகின்றது.

இவ்வாறான சிகிச்சையை தனியார் வைத்தியசாலைகள் அல்லது இந்தியா போன்ற வெளிநாடுகளில் பெறுவதாயின் பல மில்லியன் செலவீனம் ஏற்படும்.

இந்த சிகிச்சை மிகவும் சிக்கலான விடயங்களை கொண்டுள்ளது. ஆகவே மாதம் ஒன்றில் இருவருக்கு மாத்திரம் சிகிச்சை செய்யமுடியும்.

சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின் அடிப்படை யில் வைத்திய நிபுணர்களின் கடுமையான முயற்சியில் பல சிரமங்களுக்கு மத்தியில் சிகிச்சை நிலையம் ஆரம் பிக்கப் பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ)

## பெரும் குருதித் தட்டுப்பாடு;
# பொதுமக்களிடம் உதவி கோரும் யாழ்.போதனா வைத்தியசாலை

யாழ்ப்பாணம், ஜுலை 13

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனைத்து விதமான குருதிகளுக்கும் தட்டுப்பாடு நிலவி வருவதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக 'ஓ பொசிரிவ்' இரத்த வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் குருதி வழங்கத் தகுதியுடைவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கிக்கு நேரில் சென்று இரத்த தானம் வழங்கி உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 252 இந்திய மீனவர்கள் இந்த வருடத்தில் கைது!

கொழும்பு, ஜுலை 13

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத்துக்காக 252 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் 35 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகள் காரணமாக வடமாகாண மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தொடர்ந்து குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது சுட்டிக்காட்டியதாகக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் தெரிவித்திருந்தார்.

அதேநேரம் இலங்கை - இந்திய மீனவர் கூட்டுக் குழுவினை மீண்டும் கூட்டி இந்தப் பிரச்னை குறித்துக் கலந்துரையாடுமாறு அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அனுப்பிய கடிதத்தில் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஊர்காவற்றுறையில் யுவதியை கடத்திய 3 இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜுலை 13

ஊர்காவற்துறைப் பகுதியில் யுவதியொருவரைக் கடத்திய குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஊர்காவற்துறைப் பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றுக்கு அருகில் வைத்து குறித்த யுவதியை வாகன மொன்றில் கடத்திச் சென்ற இளைஞர்கள், அவரை ஊர்காவற்துறையின் பிறிதொரு பகுதியில் இறக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த இளைஞர்கள் மூவரையும் கைது செய்துள்ளதோடு, இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# இ.போ.ச. பஸ்ஸில் இருந்து தவறிவிழுந்தார் ஆசிரியர்!

## தலையில் பலத்த காயம்
## பூநகரி பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி, ஜுலை 13

பேருந்தில் இருந்து தவறி விழுந்த ஆசிரியர் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை யாழ்ப்பாணம் - பூநகரி 15 ஆம் கட்டைசந்திப் பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து மல்லாவிக்கு சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸில் சாவகச்சேரிப் பகுதியில் இருந்து குறித்த ஆசிரியர் ஏறியுள்ளார். பஸ் பூநகரி பகுதியில் பயணித்து கொண்டிருந்த போது திடீரென நிலை தடுமாறிய ஆசிரியர் பஸ்ஸின் பின்கதவால் கீழே விழுந்துள்ளார்.

இந்நிலையில் தலையில் பலத்த காயம் அடைந்த குறித்த ஆசிரியர் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (அ)

# தேசபந்து தென்னக்கோனுக்கு இடைக்கால தடை வேண்டும்!

## இளம் ஊடகவியலாளர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜுலை 13

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றுவது பிரச்னைக்குரியதாகவும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருப்பதால் அவர் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றுவதற்கு இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பிக்குமாறு இளம் ஊடகவியலாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேசபந்துவின் நியமனத்தை இரத்துச் செய்யக்கோரிய 8 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

யசந்த கோதாகொட, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்தன உள்ளிட்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையிலேயே இந்த மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

சட்டத்தரணி சுரேன் பெர்ணான்டோ, ஜனாதிபதி சட்டத்தரணிகளான ஷமில் பெரேரா, சாலிய பீரிஸ், விரான் கொரயா, சட்டத்தரணி மனீஷா குமாரசிங்க உள்ளிட்டோர் மனுதாரர்கள் சார்பில் உயர்நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

மனுதாரர் தரப்பு வாதங்கள் கடந்த 9ஆம் திகதியோடு நிறைவடைந்திருந்தன.

இந்நிலையில், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நாளாந்த அடிப்படையில் பிரதிவாதிகளின் வாதங்களை செவிமெடுக்க உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

வாதங்கள் நிறைவடைந்ததன் பின்னர் இந்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதா இல்லையா என்பது தொடர்பிலான உத்தரவை பிறப்பிப்பதற்கும் உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமித்தமை மற்றும் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு தேசபந்துவின் பெயரை பரிந்துரைத்தமை ஆகியன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தன்னிச்சையான செயற்பாடு என இளம் ஊடகவியலாளர் சங்கம் சார்பில் நீதிமன்றில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டினார். (அ)

# வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர் பல்கலை நிறைவேற்று அதிகாரிகள்!

கொழும்பு, ஜுலை 13

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் நிறைவேற்று தர அதிகாரிகள் தமது வேலை நிறுத்தத்தை கைவிடத் தீர்மானித்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்கவுடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசியல் தேவைகளுக்காகவே வேலைநிறுத்த போராட்டங்கள்

## லசந்த அழகியவன்ன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுலை 13

நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிப்பகிஷ்கரிப்பு, உண்மையான தொழிற்சங்க உரிமைகளுக்காக அன்றி, அரசியல் தேவைகளுக்காகவே முன்னெடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரயில் பணிப்பகஷ்கரிப்பு தொடர்பான தீர்வுகளை வழங்குவதில் தற்போது ஈடுபட்டுள்ளோம். 5 வருடங்களுக்கு ஒருமுறை நிலைய அதிபர்களின் பதவி உயர்வுக்கு தேவையான அனுமதியை அரச சேவை ஆணைக்குழு ஏற்கனவே வழங்கியுள்ளது.

அதற்கான அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்குத் தேவையான அமைச்சரவைப் பத்திரம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

ஆனால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிப் பகஷ்கரிப்பு வெறும் அரசியல் நோக்கத்திற்காகவே என்பது தற்போது மக்களுக்கு தெளிவாகியுள்ளது. வேலைநிறுத்தங்கள் உண்மையான தொழிசங்க உரிமைகளுக்காக நடத்தப்படவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 13.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org